
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 118 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 03 புதன்கிழமை (16.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தேர்தல் பிரசாரத்துக்காக
# ஜனாதிபதி அநுர குமார நாளை யாழ்.வருகை



(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரசாரத்துக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிர சாரத்தில் ஈடுபடவுள்ளார்.

யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்கா 15ஆம் பக்கம் பார்க்க

## பிள்ளையானைச் சந்திக்க
# அனுமதி கோரிய ரணில் மறுப்புத் தெரிவித்த அநுர அரசு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளை யான் என்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திர காந்தனுடன் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பளிக்குமாறு முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் ஆனந்த விஜேபால இதனை உறுதிப்படுத்தினார்.

தற்போது தடுப்புக்காவலில் வைக் கப்பட்டுள்ள சிவநேசதுரை சந்திர காந்தனுடன் தொலைபேசிமூலம் உரை யாட அனுமதிக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றத் தடையினால்
# தபால் மூலமான வாக்கெடுப்பு தாமதம்
## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்றத் தடையுத்தரவின் காரணமாக கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 18 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்கெடுப்பு தாமதமாகும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விபத்து
# இரு பெண்கள் உட்பட மூவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத் தில் இரு பெண்கள் உட்பட மூவர் படுகாய மடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். 15ஆம் பக்கம் பார்க்க

# விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்
## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமடைந் துள்ளார்.

கிளிநொச்சி ஐயங்குளம் புத்துவெட்டுவானில் இச்சம்பவம் இடம்பெற்றுள் ளது. 15ஆம் பக்கம் பார்க்க

# பொலிகண்டியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

பொலிகண்டி கிழக்கில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் அரிபரநிதி (வயது-73) என்ற முதியவரே சடலமாக 15ஆம் பக்கம் பார்க்க

# வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக
## நீதிமன்றம் சென்ற கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள்
## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்ற அரசியல் கட்சிகள், சுயேட் சைக்குழுக்களுக்கு தேர்தல் ஆணைக்குழு விசேட அறி விப்பு ஒன்றை வெளியிட் டுள்ளது.

சம்பந்தப்பட்ட தேர்தலுக் காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட் டது தொடர்பாக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால், அந்த மனுக் கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு களின் நகல்களை சம்பந்தப் 15ஆம் பக்கம் பார்க்க

# வடமராட்சியில் சட்டவிரோத மீன்பிடி
## 13 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடு பட்ட 13 பேர் ஐந்து படகுகளு 15ஆம் பக்கம் பார்க்க

# ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாகக் கைது செய்க
## முன்னணி சோசலிச கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரை களை அரசாங்கம் உண்மை யாகவே செயற்படுத்துவதாக இருந்தால், கொலைக் குற்றச் சாட்டுத் தெரிவிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்கவை உடனடி யாகக் கைது செய்து விசா ரணை செய்ய வேண்டும் என முன்னணி சோசலிச கட்சி யின் கல்விப் பொதுச் செயலா ளர் புபுது ஜாகொட தெரிவித் தார். 15ஆம் பக்கம் பார்க்க

## புன்னாலைக்கட்டுவனில்
# இளம் யுவதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவனில் விபரீத முடிவெ டுத்த இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் 15ஆம் பக்கம் பார்க்க

# அரச உத்தியோகத்தரை தாக்கிய பொலிஸார்
## விசாரணைக்கு அழைத்த மனித உரிமைகள் ஆணைக்குழு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அரச உத்தி யோகத்தரான இளைஞனைத் தாக்கிய பொலிஸாரை விசா ரணைக்காக மனித உரிமை கள் ஆணைக்குழு அழைத் துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டை முன்னிட்டு மகிந்த - கோட்டா சந்திப்பு



(கொழும்பு)

அரசியல் மட்டத்தில் தற்காலிக ஓய்வினைப் பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்ஷக்கள் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்காகச் சென்றிருந்தார்.

இந்தச் சந்திப்பு விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக மகிந்தவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

அதில், "எனது சகோதரர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷ ஆகியோர் எனது உத்தியோகபூர்வ இல்லத்தில் என்னைச் சந்திக்க வந்தனர். நாங்கள் மிகவும் அன்பான உரையாடலை மேற்கொண்டோம்.

புத்தாண்டு தினத்தன்று அவர்கள் கைகளில் வெற்றிலையுடன் வருவதைப் பார்த்த போது, பக்மாவில் உறவினர்களை பார்க்க செல்லும் சம்பிரதாயமே எனக்கு நினைவுக்கு வந்தது.

அவர்கள் இருவருக்கும் வளமான மற்றும் ஆரோக்கியமான புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்வில் பல நண்பர்களும் கலந்து கொண்டனர். அவர்களுக்கு வளமான மற்றும் ஆரோக்கியமான புத்தாண்டு வாழ்த்துக்கள்" என அவர் பதிவிட்டுள்ளார். (ம-4,7)

# இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் மூலம் முரண்பாடற்ற தீர்வு வழங்கப்படும்

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உரு வாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக முரண்பாடற்ற தீர்வினை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். இந்த சட்டத்துக்கு எதிராகவே நாங்கள் செயற்பட்டோம். பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கும், நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புதிய சட்டத்தை இயற்றுவ தற்கும் கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட பணிகள் குறித்து தீவிர கரிசனை கொண்டுள்ளோம்.

தேசிய பாதுகாப்பினை கருத்திற்கொண்டு பாதுகாப்புத் தொடர்பான சட்டம் இயற்றப்படும். நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடை ச்சட்டத்தை இரத்துச் செய் வது தொடர்பில் ஆராய்வ தற்கு ஜனாதிபதி சட்டத் தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியது.


பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வது அரசாங்கத்தின் கொள்கை, ஆகவே இந்தச் சட்டத்தை இரத்துச் செய்து ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை முன்னிலைப்படுத்திய வகையில் புதிய சட்டத்தை உருவாக்குவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்பதை குறித்த குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தியுள்ளேன்.

புதிய அரசியலமைப்பு உரு வாக்கத்தில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வினை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம்.

காலம் காலமாக தொடரும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு சிறப்பு ஆணை வழங்கியுள்ளார்கள்.

பொருளாதார ஸ்திரபடுத்தலுடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாகாண சபைத் தேர்தலை நடவத்துவதற்கும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம் என்றார். (ம-4,7)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.03.2025 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் மகேசன் மாதவன்

(பொறியியலாளர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 16.04.2025 புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் சரஸ்வதி மண்டபத்தில்(ராஜா கிறீம் ஹவுஸ், சேர்.பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெற இருப்பதனால், இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறிய அன்புள்ளங்கள் மற்றும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி நிழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-2718)

வேம்பன் ஒழுங்கை
(ஒஸ்கா லேன்),
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்
075 726 2964


# ரூ.230 மில்லியன் பெறுமதியான போதைப்பொருளுடன் அமெரிக்கப் பிரஜை கைது

(கொழும்பு)

230 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருளுடன் அமெரிக்கப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்துக் குறித்த நபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த நபரிடமிருந்து 23 கிலோகிராம் குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-4,7)

# கைப்பை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

அராலி வட்டுக் கோட்டையைச் சேர்ந்த பாஸ்கரன் ஆதவன் (910802933V) என்பவரது தேசிய அடையாள அட்டை, வாகன அனுபதிப் பத்திரம் உள்ளடங்கிய கைப்பை நல்லூர்ப் பகுதியில் மீட்கப்பட்டு வலம்புரிப் பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (ம-4,7)


## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா மகாதேவன்

(முன்னாள் சமாச பணிப்பாளர் சபை உறுப்பினர்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம்.

(c-2717)

தலைவர்
பணிப்பாளர்களும்
பணியாளர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொன்னான வாய்ப்புக்களை தமிழ்த்தலைவர்கள் தவறவிட்டு விட்டனர்

## கலாநிதி தயான் ஜயதிலக சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**அநுரகுமார அரசாங்கம் புதிய அரசமைப்பு உருவாக்கச் செயற்பாட்டை கையிலெடுத்தால் மாகாண சபை முறைமையை நீக்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. ஆகவே தற்போதைய சூழலை தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொண்டு தமது பழைய சித்தாந்தங்களை கைவிட்டு, நடைமுறைச் சாத்தியமான விடயங்களுக்கான இந்தியாவுடன் மீள் ஊட்டத்துக்குச் செல்ல வேண்டியது அவசியமாகின்றது என இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்தார்.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான விஜயம் சம்பந்தமாகவும், அவருடனான தமிழ்த் தலைமைகளின் சந்திப்புத் தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் வருகைக்கும், 2025 இல் நரேந்திர மோடியின் வருகைக்கும் இடையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

1987இல் இந்தியப்படைகள் நிலை கொண்டிருக்கையில், மிராஜ் விமானங்கள் வட்டமிட்டுக்கொண்டிருக்கையில் தான் ராஜீவ் காந்தியின் வருகை நிகழ்ந்தபோது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் அச்சமடைந்த நிலையில் இருந்தார்.

ஆனால் இந்திய எதிர்ப்பு வாதக் கொள்கையில் செயற்பட்ட ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற தருணத்தில் பிரதமர் மோடியின் வருகை நிகழ்ந்திருக்கின்ற நிலையில் அது அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றிருக்கின்றது.

அதேபோன்று ராஜீவ் காந்தியின் வருகையானது, அது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கானத் தீர்வை மையப்படுத்தியதாக இருந்தது. குறிப்பாக, தமிழ் மக்களின் பூர்வீகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தியதாகவே விவகாரம் இருந்தது.

ஆனால், பிரதமர் மோடியின் விஜயமானது, ஒட்டு மொத்தமாக பொருளாதாரத்தை மையப்படுத்தியதாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியாவின் எதிர்கால பொருளாதார மூலோபாயத் திட்டங்களை மையப்படுத்தியதாகவே உள்ளது.

பிரதமர் மோடி தனது இலங்கை விஜயத்தின்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேசிய பிரச்சினை தொடர்பிலோ, அதிகாரப்பகிர்வு தொடர்பிலோ உத்தியோக பூர்வமாக எந்த விடயங்களையும் குறிப்பிடவில்லை.

அவர் ஆகக்குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாகக் கூட நேரடியாகக் கூறாது, இலங்கையின் அரசமைப்பு முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும். மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த நிலைமைக்கு முழுக்க முழுக்க காரணமாக இருப்பவர்கள் வடக்கு, கிழக்கு தமிழ்த் தலைவர்களே. ஏனென்றால் இவர்கள் 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டபோது அதனை ஏற்றுக்கொண்டு மாகாண சபை முறையில் பங்கேற்கவில்லை. குறிப்பிட்ட விடுதலை இயக்கங்கள் மட்டுமே பங்கேற்றன. பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகளும் பங்கேற்கவில்லை.

அதன் பின்னர் புலிகளின் தனிநாட்டுக் கொள்கையை தலைவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு பயணித்தார்கள். பிரபாகரனின் தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் அங்கீகரித்தார்கள்.

போரின் முடிவின் பின்னர் அவர்கள் தங்களுடைய எதிர் காலச் செயற்பாடுகள் சம்பந்தமாக மீளாய்வு செய்வில்லை.

மாறாக, இந்தியா வழங்கிய அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளாது அவர்களுக்கு கிடைத்த அத்தனை சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தாது வரலாற்றுத் தவறிழைத்தார்கள்.

இந்தியாவை விடவும் புலம்பெயர் தமிழர்களையும் மேற்குலகத்தையும் அபரிதமாக நம்பிக்கொண்டு 13 ஆவது திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு உள்ளிட்ட விடயங்களை முறையாக கையாளாது அவற்றை ஒற்றையாட்சிக்குள் பெற முடியாதென நிராகரித்துவிட்டு, பொறுப்புக்கூறல், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம், வெளிநாட்டு விசாரணையாளர்கள் என்று நடைமுறைச்சாத்தியமற்ற விடயங்களின் மீது காலத்தினைக் கடத்தினார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# பிள்ளையானை சந்திக்க கம்மன்பிலவுக்கு அனுமதி



(கொழும்பு)

தற்போது கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானைச் சந்திக்க சந்தர்ப்பம் வழங்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.


அதன்படி, பிள்ளையானை சந்திக்க கம்மன்பிலவிற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அனுமதியானது, பிள்ளையானின் சட்டத்தரணியாக கம்மன்பில செயற்படுவதால் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு சென்ற குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் பிள்ளையான் திடீரென கைது செய்யப்பட்டார்.

அதன்போது கைதுக்கான காரணம் உடனடியாக தெரிவிக்கப்படாத நிலையில், பின்னர் 2006 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழக துணைவேந்தர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில், சந்தேக நபரான பிள்ளையான் தற்போது 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# தொடர்ந்து பதிவாகும் தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

கடந்த 24 மணி நேரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் 5 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இவ்வாறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இந்த சம்பவங்கள் தொடர்பில் கடந்த 24 மணிநேரத்தில் வேட்பாளர் ஒருவரும் 6 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் இதுவரையில் 15 வேட்பாளர்களும், 52 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே கடந்த 3 ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தினை மீறியமை மற்றும் வன்முறைகள் தொடர்பில் 127 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் 12 வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து இதுவரையில் 1,206 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையாக சரிந்தன விக்கெட்டுக்கள்; மகிழ்ச்சியால் திளைத்தது பஞ்சாப்




## இலகு வெற்றியை கோட்டைவிட்டது கொல்கத்தா

சாஹல், ஜான்சன் கூட்டணியின் கலக்கலான பந்துவீச்சில் குறைந்த ஓட்ட எண்ணிக்கையில் வைத்து எதிரணியைக் கட்டுப்படுத்தி பிரமிக்கத்தக்க வெற்றியைப் பெற்றது பஞ்சாப். இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் நேற்றுப் பஞ்சாப், முல்லன்புரில் நடந்த போட்டியில் பஞ்சாப் - கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் ஷ்ரேயஸ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். கொல்கத்தா அணியில் மொயீன் அலி நீக்கப்பட்டு நோர்க்யா சேர்க்கப்பட்டார்.

**நல்ல ஆரம்பம்**

பஞ்சாப் அணிக்கு பிரப்சிம்ரன், பிரியான்ஷ் ஆர்யா ஜோடி துவக்கம் கொடுத்தது. வைபவ் அரோரா ஓவரின் முதல் மூன்று பந்தில் 4, 6, 4 என விளாசினார் பிரப்சிம்ரன். ஆர்யா தன் பங்கிற்கு ஒரு பவுண்டரி அடிக்க 20 ஓட்டங்கள் கிடைத்தன. உடனே அணித் தலைவர் ரஹானே, ஹர்ஷித் ராணாவை பந்து வீச அழைத்தார். இதற்கு கைமேல் பலன் கிடைத்தது.

முதல் பந்தில் 82 மீ., தூரத்திற்கு சிக்சர் அடித்த ஆர்யா (22 ஓட்., 12 பந்து) அடுத்த பந்தில் ராமன்தீப்பிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஷ்ரேயசை, இரண்டாவது பந்தில் "டக்" அவுட்டாக்கி மிரட்டினார் ஹர்ஷித் ராணா. மறுபக்கம் வருண் சக்கரவர்த்தி பந்தை சுழற்றினார்.

இவரது முதல் ஓவரில், 2 ஓட்டங்கள் மட்டும் எடுத்த ஜோஸ் இங்லிஸ் போல்டானார். ஹர்ஷித் ராணா, பிரப்சிம்ரனை (30) வெளியேற்றி அதிர்ச்சி கொடுத்தார்.

இதன் பின் அணியின் ஓட்டவேகம் அப்படியே குறைந்தது. நோர்க்யா வீசிய போட்டியின் 9ஆவது ஓவரில், அடுத்தடுத்து பவுண்டரி அடித்த வதேரா (10), வெங்கடேஷிடம் "பிடி" கொடுத்து வெளியேறினார். மீண்டும் வந்த வருண் சக்கரவர்த்தி, மக்ஸ்வெல்லை (7) போல்டாக்கினார்.

மறுபக்கம் சுழல் "மாயாவி" சுனில் நரைன், 11ஆவது ஓவரை வீசினார். முதல் பந்தில் சுயாஷ் (4) வீழ்ந்தார். கடைசி பந்தில் யான்சென் (1) போல்டானார். வருண் சக்கரவர்த்தி பந்தில் ஷஷாங்க் சிங் (18) ஒரு சிக்சர் அடிக்க, பஞ்சாப் அணியின் ஓட்ட எண்ணிக்கை ஒருவழியாக 100 ஓட்டங்களை (104/8) கடந்தது. ஷஷாங்க், 18 ஓட்டங்கள் எடுத்தபோது, வைபவ் பந்தில் ஆட்டமிழந்தார். கடைசியில் பார்ட்லெட் (11) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பஞ்சாப் அணி 15.3 ஓவரில் 111 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பந்துவீச்சு சார்பில் ஹர்ஷித் ராணா 3, வருண் சக்ரவர்த்தி 2, சுனில் நரைன் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**சஹால் "நான்கு"**

கொல்கத்தா அணி, 14.1 ஓவரில் இலக்கை அடைந்தால் புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறலாம் என்ற நிலையில் களமிறங்கியது.

எளிதான இந்த ஓட்ட எண்ணிக்கையை வேகமாக எட்டும் என நம்பப்பட்டது. மாறாக ஆரம்பத்தில் குயின்ரன் டி கொக் (2), சுனில் நரைன் (5) ஜோடி "ஷாக்" கொடுத்தது. ரஹானே, ரகுவன்ஷி ஜோடி அணியை (62/2) மீட்டது.

பின் திடீரென சரிவு ஏற்பட்டது. சஹால் சுழலில் ரஹானே (17), ரகுவன்ஷி (37) அவுட்டாகினர். மேக்ஸ்வெல் வலையில் வெங்கடேஷ் (7) சிக்கினார். மீண்டும் மிரட்டிய சஹால் அடுத்தடுத்த பந்தில் ரிங்கு சிங், ராமன்தீப்பை (0) அவுட்டாக்கினார்.

**ரசல் "போல்ட்"**

சஹால் ஓவரில் ஆன்ட்ரு ரசல் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடிக்க கொல்கத்தாவின் வெற்றி வாய்ப்பு பிரகாசமானது. 31 பந்துகளில் 17 ஓட்டங்கள் தேவைப்பட கைவசம் 2 விக்கெட்டுக்கள் மட்டும் மீதமிருந்தன. இந்நிலையில் அர்ஷ்தீப் பந்தில், வைபவ் (0) ஆட்டமிழந்தார். யான்சென் "வேகத்தில்" ரசல் (17) போல்டாக, கொல்கத்தா அணி 15.1 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பில் சஹால் 4, யான்சென் 3 விக்கெட்டுக்களை சாய்த்தனர். இரு அணி பவுலர்களும் ஆதிக்கம் செலுத்த 20 விக்கெட்டுகளும் சரிந்தன.

**7 ஓட்டங்கள், 5 விக்கெட்டுக்கள்**

கொல்கத்தா அணி நேற்று ஒரு கட்டத்தில் 72/3 என இருந்தது. அடுத்து 7 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுகளை இழந்து 76/8 என தவித்தது. கடைசியில் 95 ஓட்டங்களில் சுருண்டது. (ம-4,7)

## காற்பந்தாட்டப் போட்டி

# கிண்ணத்தை சுவீகரித்தது வடமராட்சி கொலின்ஸ் அணி




மன்னார் எருக்கலம்பிட்டி காற்பந்தாட்ட கிண்ணத்தை வடமராட்சி கொலின்ஸ் அணியினர் கைப்பற்றி வெற்றி வாகை சூடினர்.

மன்னார் எருக்கலம்பிட்டி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடாத்திய 40 வயதிற்கு மேற்பட்ட வீரர்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி மன்னார் எருக்கலம்பிட்டி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் வடமராட்சி கொலின்ஸ் அணியை எதிர்த்து வடமராட்சி சொக்கர் மாஸ்டர் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர். இதில் முதலாவது கோலை கொலின்ஸ் அணி வீரர் ராஜா பதிவு செய்ய அதற்கு சொக்கர் மாஸ்டர் அணி வீரர் இலங்கேஸ்வரன் தமது அணி சார்பாக ஒரு கோலைப் பதிவு செய்து கோல்களின் எண்ணிக்கையை சம நிலைப்படுத்தினார்.

இதனால் இரண்டாவது பாதியாட்டம் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் கொலின்ஸ் அணி வீரர் பிரவீன் குமார் மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் வடமராட்சி கொலின்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

ஆட்ட நாயகனாக கொலின்ஸ் அணியை பிரதிநிதித்துவம் செய்த அகிலதீபன், சிறந்த கோல் காப்பாளராக கொலின்ஸ் அணியை பிரதிநிதித்துவம் செய்த சத்தியேந்திரா ஆகியோரும் சிறந்த விளையாட்டு வீரர்களாக சொக்கர் மாஸ்டர் அணி வீரர் சுதாகரன் மற்றும் கொலின்ஸ் அணி வீரர் ராஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (நி-8,90)

## உலகின் சிறந்த கீப்பர் டோனி

### ஆஸி.வீரர் புகழாரம்

டோனி தான் உலகின் சிறந்த விக்கெட் கீப்பர் எனவும் அவரது கப்டன்சி துல்லியமாக இருந்ததாகவும் முன்னாள் அவுஸ்திரேலிய அணியின் கப்டன் மைக்கேல் கிளார்க் தெரிவித்தார்.

ஐ.பி.எல் தொடரின் நேற்று முன்தின ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - லக்னோ அணிகள் மோதின. இதில் முதலில் பட்டிங் செய்த லக்னோ அணி 166 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய சென்னை 19.3 ஓவரில் 168 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதுவரை மொத்தம் ஏழு போட்டிகளில் இரண்டாவது வெற்றியை சி.எஸ்.கே பெற்று இருக்கிறது.

இந்த போட்டியின் ஆட்ட நாயகனாக சி.எஸ்.கே அணியின் கப்டன் டோனி தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை

# யாழ். மாநகர சபை இயக்குவது தொடர்பில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்டப்பட்டு இந்திய அரசாங்கத்தால் பராமரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ்ப்பாணம் மாநகர சபை, எதிர்காலத்தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தின் பராமரிப்புக்குரிய பொறுப்பை இந்திய அரசாங்கம் 5 ஆண்டுகளுக்கு ஏற்றிருந்த நிலையில் அதில் 4 ஆண்டுகள் வரையில் நிறைவுபெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை அதனைக் கொண்டு நடத்துவதற்குரிய ஒழுங்குகளை முன்னெடுப்பதற்காகவும் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

எவ்வளவு விரைவாக இதனை மாநகர சபையே பொறுப்பேற்று இயக்க முடியுமோ அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளி கருத்து வெளியிடுகையில், இந்தக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்கான இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டம் 2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தின் பின்னர் நடத்தப்படவில்லை என்றும் அது எவ்வளவு விரைவாக இடம்பெறுகின்றதோ, அதற்கு அமைவாகவே ஏனைய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இணை முகாமைத்துவக் குழுவை உள்ளூரை மையப்படுத்தியதாக உருவாக்குவது சிறப்பாக இருக்கும் என்றும், அத்துடன் இந்தியத் தூதரகம் ஆலோசனை வழங்கும் ஒரு தரப்பாகவே எதிர்காலத்தில் இருக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் கலாசார மண்டபத்தின் ஒவ்வொரு மாடிக் கட்டடத் தொகுதிக்குமான பல்வேறு விதமான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இது சாதகமானதொரு நிலைமை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலர் இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன். வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் திருமதி எழிழரசி அன்ரன் யோகநாயகம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் நிதி எஸ்.குகதாஸ், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு. யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-8)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் மீளவும் கட்டியெழுப்பப்பட வேண்டும்

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

1970 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் பாரம்பரியமான நிறுவனமாக தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இருக்கின்றது. இந்த நிறுவனத்தை மீளவும் கல்விப்புலம் சார்ந்த ஒன்றாகவும். நம்பகத்தன்மை மிக்கதாகவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். தனி நபர்களால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் மீளவும் முறையான வழிமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் செயற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயளாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட் ஆகியோர் பங்கேற்றனர். (நி-8)

# அமெரிக்காவிடம் ஆறு மாத வரி சலுகை கோருவதற்கு தயாராகும் இலங்கை

(கொழும்பு)

அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள பரஸ்பர தீர்வை வரி அமுலாக்கத்தின் இடைநிறுத்தக் காலத்தை நீடிக்குமாறு இலங்கை அரசாங்கம் கோரிக்கை முன்வைக்கவுள்ளது.

இலங்கை மீதான பரஸ்பர தீர்வை வரியை 44 சதவீத மாக அதிகரித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பை வெளியிட்டதை அடுத்து, இலங்கையில் பெரும் பொருளாதார பாதக நிலை உணரப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டதுடன், இதற்கான நிபுணர் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் தீர்வையும் ஒத்தழைப்பையும் கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால், அமெரிக்க ஜனாதிபதிக்கு உடனடியாக கடிதம் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டது.

எவ்வாறாயினும் புதிய வரி அமுலாக்கத்தை 90 நாட்களுக்கு அமெரிக்கா ஒத்திவைத்தது.

இந்த காலத்தை ஆறு மாதங்களாக நீடிக்குமாறு இலங்கை அரசாங்கம் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுக்கவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகளை அதிகரிப்பதன் ஊடாக, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக இடைவெளியைக் குறைத்து, வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்வது குறித்தும் ஆராயப்படுகிறது. (நி-8)

# இராசிபலன்

16.04.2025
சித்திரை 03, புதன்கிழமை
திருதியை முற்பகல் 11.47 மணிவரை
அனுசம் பின்னிரவு 4.06 மணிவரை

சுபநேரம் 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சாங்கடகர சதுர்த்தி விரதம்,
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்-பரணி

வளவன்




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் கூடும், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.




பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வங்கியில் வைப்பு நிதியை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும்.




நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடு வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நண்பர்கள் உங்களின் முயற்சிக்கும் பக்க பலமாக இருப்பர், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




வியாபார விருத்தியுண்டு, கனவுப்பலிதமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்




எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பயணங்களால் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.




திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவு கள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதக மாகி விடும்.

இளமையில் முகம் அழகு, முதுமையில் ஆன்மா அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற கிராமிய விளையாட்டு நிகழ்வுகள்




(கரணவாய்)

சித்திரைப் புத்தாண்டு தினத்தில் மீசாலை நகுலன் சனசமூக நிலையத்தின் தமிழர் பண்பாட்டு கிராமிய விளையாட்டு நிகழ்வுகள் நேற்று நகுலன் சனசமூக நிலைய மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

சனசமூக நிலைய தலைவர் மகாலிங்கம் மதுஷன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் மீசாலை மண்ணின் மைந்தனுமான கனகசபாபதி கனகேஸ்வரன் மற்றும் வைத்தியர் சிவசாதனா தினேஸ், வைத்தியர் வினாசித்தம்பி கஜீபன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

இதன் போது சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், கிடுகு இழைத்தல், சங்கீதக் கதிரை, ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறிழுத்தல், தலையணைச் சண்டை முட்டியுடைத்தல் போன்ற விளையாட்டுக்களும் இடம்பெற்றிருந்தன. (நி-8-60)

# தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் முதலாம் கல்வியாண்டில் தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் (NVQ) மற்றும் குறுங்கால பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நீரியல் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ தேசிய டிப்ளோமா, கடலுணவு தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா, கடலக ஏற்பாட்டியல் மற்றும் முகாமைத்துவ தேசிய டிப்ளோமா, நீரியல் வளர்ப்பு தொழில்நுட்பவியலாளர், வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக மாலுமி. சுழியோடி, உயிர் பாதுகாப்பு மேலும் குறுங்கால பயிற்சி நெறிகளாக அலங்கார மீன்வளர்ப்பும், முகாமைத்துவமும் நீச்சல் பயிற்சிநெறி, கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும், கடற்பாசி வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு, இழைநார் படகு திருத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய ப்யிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் ஆர்வமுடையவர்கள் இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடிவதுடன் இத் துறைகளில் அனுபவமுடையவர்கள் முன் கற்றலுக்கான அங்கீகார முறைமையின் அடிப்படையிலும் தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழினை பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்படி கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை தபாலிலோ அல்லது நேரிலோ எமது அலுவலகத்தில் பெற்று 30.04.2025 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-8)

# ஒட்டுசுட்டான் பனை-தென்னை வள கூட்டுறவுச் சங்க உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிக்கல்

## நேரில் சென்று பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் சிக்கல் நிலையை எதிர்கொள்வதால், குறித்த கூட்டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் பெரும் வாழ்வாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந் நிலையில் ஒட்டுசுட்டான் பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அழைப்பை ஏற்று நேற்று நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்த வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஒட்டுசுட்டான் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். (நி-8-299)

# சாயி பாபாவின் ஆராதனை

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஆராதனை தினத்தை முன்னிட்டு "சஹஸ்ர காயத்ரி மஹா மந்திர சாதனை" 15.04.2025-20.04.2025 வரை யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் மாலை 6மணி முதல் 7 மணி வரை இடம்பெறவுள்ளது. (நி-8)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஓய்வு பெற்ற ஊழியர் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்க பொது அறையில் தலைவர் க.நாகஜெயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)


SLIC Sri Lanka Insurance LIFE

# ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், 2024 ஆம் ஆண்டின் வரிக்கு முந்திய இலாபமாக (PVT) ரூ.30.7 பில்லியன் எனும் வலுவான ஒரு நிதியியல் நிலையை பதிவு செய்துள்ளது

விளம்பர விபரணம்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், 2024 ஆம் ஆண்டில் 25% வளர்ச்சியுடன் ரூ.26.3 பில்லியன் எனும் வலுவானதொரு GWP யினைப் பதிவு செய்துள்ளது.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், 2024 ஆம் ஆண்டில் எப்போதுமில்லாத வகையில் புதிய வியாபாரத்தில் ரூ.5.3 பில்லியன் எனும் 48% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், 2024 ஆம் ஆண்டில் உரிமைக்கோரல்கள் மற்றும் முதிர்வுக் கொடுப்பனவுகளாக மாதாந்தம் சராசரியாக ரூ.1.15 பில்லியனையும், மொத்தமாக ரூ.13.7 பில்லியனையும் வழங்கியுள்ளது.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் (SLICLL) 2024ஆம் ஆண்டை மிகவும் சிறந்த நிதி ரீதியான ஆண்டாக நிறைவு செய்துள்ளதுடன், வரிக்கு முந்திய இலாபமாக ரூ.30.7 பில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளது. ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், ரூ.26.3 பில்லியன் வலுவானதொரு GWP யினைப் பதிவு செய்துள்ளது மற்றும் நிறுவனத்தின் 25% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. குறிப்பிடத்தக்க வகையில், டிசம்பர் 31, 2024 புள்ளிவிபரப்படி, ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், (SLICLL), ரூ.5.3 பில்லியன் புதிய வணிக வியாபாரத்தை எட்டியதன் மூலம், 48% வளர்ச்சியைப் பதிவு செய்து, நிறுவனத்தின் வரலாற்றில் மிக உயர்ந்த மைல்கல்லை எட்டியுள்ளது.

வாடிக்கையாளர்கள் மீதான அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் 2024ஆம் ஆண்டில் உரிமைக்கோரல் மற்றும் முதிர்வுக் கொடுப்பனவுகளாக ரூ.13.7 அதன் பில்லியனை தன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது. இந்த புள்ளி விபரங்கள் நிறுவனத்தின் நிதி வலிமை மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன காப்புறுதித்தொழிற் சந்தையின் தலைவராக தனது நிலையை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயுள், தனது சொத்து மதிப்பை ரூ.237 பில்லியனாக உயர்த்தியதுடன், அதன் ஆயுள் நிதியத்தையும் ரூ.213.2 பில்லியனாக உயர்த்தியுள்ளது. நிறுவன மாற்றங்கள் மற்றும் சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் இந்த சாதனைகள் நிகழ்த்தப்பட்டதுடன் மேலும் கூடுதலாக, நிறுவனம் 319 MDRT வெற்றியாளர்களையும் உருவாக்கியுள்ளது. இது ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், நிறுவனத்திற்கு இதுவரை இல்லாத அதிகபட்ச MDRT வெற்றியாளர்கள் ஆகும்.

தனது தனித்துவமான முதலீட்டு உத்திகள் மற்றும் அதன் வாடிக்கையாளர்கள் மீதான அசைக்க முடியாத அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும் வகையில், ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் , 2023ஆம் ஆண்டிற்காக தொழிற்துறையில் மிகப்பெரிய ஆயுள் காப்புறுதி இலாபப்பங்கினை (Bonus) அறிவித்தது. இது ரூ.11.2 பில்லியன் ஆகும்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக, நிறுவனம் தொடர்ந்து தொழிற்துறையில் மிக உயர்ந்த போனஸ் கொடுப்பனவுகளை வழங்கி வருகிறது. ஒட்டுமொத்தமாக ரூ.104 பில்லியன் ... போனஸ் கொடுப்பனவுகளுடன் ஒப்பி... முடியாத இலக்கை எட்டியுள்ளது.




இது தொடர்பில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் இன் குழும தலைமை நிர்வாக அதிகாரி திரு. சந்தன எல். அளுத்கம கூறுகையில், "எங்களின் நிதிரீதியான அசாத்திய திறமை மேலும் எங்கள் குழு அர்ப்பணிப்புடன் சவால்களை ஏற்றுக்கொண்ட வினைத்திறனான செயற்பாட்டிற்கு இது ஒரு சான்றாகும். பொருளாதார ஏற்ற இறக்கங்கள் மற்றும் உள்ளக மாற்றங்கள் இருந்தபோதிலும், எங்கள் மூலோபாய கவனம் எங்கள் சந்தை தலைமையை வலுப்படுத்தியுள்ளது. எதிர் காலத்தில் நாம் அடியெடுத்து வைக்கும் போது புதுமை, வாடிக்கையாளர் நம்பிக்கை மற் றும் தொழில்துறை தலைமைத்துவத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள உறுதிபூண்டுள்ளோம்."

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் . ISO 9001:2015, ISO/IEC 27001:2013 மற்றும் ISO 14064-1:2018 போன்ற சான்றிதழ்களை தனது அர்ப்பணிப்பான அசாத்திய திறமை மற்றும் சர்வதேச தரவரிசை செயற்பாடுகளுக்காக பேணி வருகின்றது. உகை சிறுவர்கள் தினத்தன்று புதிதாகப் பிறந்த குழந்தைகளின் பெற்றோருக்கு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இலவச ஆயுள் காப்புறுதித் திட்டம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1100 குடும்பங்களுக்கு ஆதரவளித்தல், பொசன் போயாவிற்கு அநுராதபுரத்திற்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு அவசர உதவி வழங்குதல் மற்றும் தேசிய தேர்வுகளில் சிறந்து விளங்கும் 370 மாணவர்களுக்கு "சுபபெத்தும்" உதவித்தொகைகளை வழங்குதல் உள்ளிட்ட சமூக பொறுப்புக்களிலும் நிறுவனம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில், ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப், புதுமைகளை முன்னெடுப்பது, வாடிக்கையாளர் நம்பிக்கையை மேம்படுத்துவது மற்றும் சமூகத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்புகளை வழங்குவதில் கவனம் செலுத்தி வருகின்றது.

உறுதியான அடித்தளம் மற்றும் தெளிவான தொலைநோக்குப் பார்வையுடன், காப்புறுதித் துறையில் சிறந்து விளங்குவதுடன் மேலும் தலைமைத்துவத்தின் மரபைத் தக்க வைத்துக் கொள்ள நிறுவனம் அயராது உழைத்து வருகிறது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘வேரினை நோக்கிய விழுதுகள்’ நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டமும் அறிவாலயமும் இணைந்து நடத்தும் கவிஞர். நாக. சிவசிதம்பரம் எழுதிய “வேரினை நோக்கிய விழுதுகள்” கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இணுவில் அறிவாலயத்தில் மாலை 3.30 மணிக்கு அறிவாலயத் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரை- தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வாழ்த்துரை- கவிஞர் சோ. பத்மநாதன், தொடக்கவுரை- பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கவிஞர் த. ஜெயசீலன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் நூல் வெளியீட்டுரை- இணுவில் கலை இலக்கிய வட்ட தலைவர் பேராசிரியர் கந்தையா ஸ்ரீ கணேசன், நூல் மதிப்புரை- யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா மற்றும் வலிகாம கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பா. மகாலிங்கம் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் ஏற்புரையினை வேரினை நோக்கிய விழுதுகள் நூலின் நூலாசிரியர் கவிஞர் நாகசிவசிதம்பரம் நிகழ்த்தவுள்ளார். (நி-8)

# உயர்வெப்பநிலையால் ஆபத்து

## அதிக தண்ணீர் பருகுமாறு அறிவுறுத்து

**(கொழும்பு)**

**நாட்டின் பல பகுதிகளில் இந்த நாட்களில் அதிக வெப்பம் நிலவுவதால் அதிகளவில் தண்ணீரைப் பருகுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.**

குறிப்பாக வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் உயர் வெப்பநிலை அதிகமாக இருப்பதாக திணைக் களம் தெரிவித்துள்ளது. மனித உடலை நீண்ட நேரம் வெப்பத்தில் வெளிப்படுத்துவது நீரிழப்பு, தசைச் சிதைவு, அதிகப்படியான சோர்வு மற்றும் பக்கவாதத்திற்கு வழி வகுக்கும் என்றும் வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இது குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுபோன்ற கடுமையான வெப்பநிலை தொடர்ந்தால், பொது மக்கள் அதிக அளவு தண்ணீர் குடிக்கவும் கடுமையான செயற்பாடுகளை குறைக்கவும் நிழலான பகுதிகளில் தங்க வேண்டும் எனவும் திணைக் களம் அறிவுறுத்தியுள்ளது. (நி-8)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15 நாவலர் வீதியில் அமைந்துள்ள 328 எனும் ஆதனப் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் கணபதிப்பிள்ளை வள்ளிநாயகி, கணபதிப்பிள்ளை கைம்பெண் மாரிமுத்து என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை மாரிமுத்து என்பவர் யாழ் நொத்தாரிசு செல்லையா சோமசேகரம் முகதாவில் 1983.12.02 ஆம் திகதி 9105 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் நாகேசு பத்மநாதன் பெண் வள்ளிநாயகிக்கு வழங்கியுள்ளார். மேலும் இவ்வாதனம் யாழ்ப்பாண நீதிமன்ற வழக்கு இல P/2452, இல 1140 இருந்ததாக உறுதியில் காட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கு யாழ்ப்பாணம். நாவலர் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை என்பவர், யாழ் நொத்தாரிசு இ. சபேசன் முகதாவில் 2008.08.20 ஆம் திகதி 1802 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் வழக்கு இல காணி/1121 இன் தீர்ப்பின்படி தனது காலம் சென்ற சிறியதாயார் கணபதிப்பிள்ளை கைம்பெண் மாரிமுத்துவிற்கு வந்தடைந்த முதுசமும் கடந்த எழுபத்திஐந்து வருடங்களுக்கு மேலாக எமது சொந்தமும் நிந்தமும் தடையற்ற ஆட்சியும் என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், நாவலர் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கோபாலப்பிள்ளை என்பவர் யாழ் நொத்தாரிசு மு. திருநாவுக்கரசு முகதாவில் 2010.05.02 ஆம் திகதி 2597 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடையாக கோபாலப்பிள்ளை சுதர்ஜன் என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

மேலும் குறித்த ஆதனத்தில் கோபாலப்பிள்ளை சுதர்ஜன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என யாழ் நொத்தாரிசு வீ. கௌதமன் முகதாவில் 23.02.2022 ஆம் திகதி 1808 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் அற்றோனித்தத் துவக்காரராகிய செல்வராசா லதிபன் மூலம் தனது பெயர் கோபாலப்பிள்ளை சுதர்சன் என வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு வண்ணார்பண்ணை கோவிற்பற்று. வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை J/ 78 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள “குத்தகைத் தோட்டமும் இராசபுலமும் குஞ்சிக்கலட்டியும் இத்தித்தோட்டமும்” நில. பர 2குளி 12.02. இது நிலஅளவையாளர் K. பரமேஸ்வரன் 07.04.2010 ஆம் திகதி அளந்து தயாரித்த 39/2010 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு இரண்டு குளி பன்னிரண்டு தசம் பூச்சியம் இரண்டுக்குரிய எல்லை

கிழக்கு அம்பலவாணர் வீதியும், கதிரவேலு இரத்தினராசாவின் ஆதனமும்
வடக்கு -கதிரவேலு இரத்தினராசாவின் ஆதனமும் நாவலர் வீதியும்
மேற்கு - சுதாகர் பெண் நாகேஸ்வரியின் ஆதனம்
தெற்கு - ஆறுமுகம் ஏரம்புவின் ஆதனம்
இதடங்கலும் வீடு, கிணறு, செய்பயிர் வான்பயிர் உட்பட இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது இவ்வாதனத்தை கோபாலப்பிள்ளை சுதர்சன் என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கோபாலப்பிள்ளை சுதர்சன் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர், யாழ். மாநகரசபை** (சி-2714)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1990- இந்து
நட்சத்திரம்: அத்தம்
கிபா-33
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: HND in IT,Teacher(London)
எதிர்பார்ப்பு -தகுதியான பெண் (London)
தொ.இ: B/15326

பிறப்பு:1998-RC
நட்சத்திரம்: சித்திரை 10இல் சூரி செவ்
உயரம் :5'9"
தகைமை/தொழில்- IT Diploma,Supervisor
எதிர்பார்ப் பு: தகுதியான பெண்
தொ.இ: B/15328

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம் -உத்திரம் 12 இல் செவ்
உயரம் : 5'7"
தகைமை/தொழில்:O/L,Technician
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15329

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம் : அனுசம்
கி.பா-16
உயரம் : 5
தகைமை/தொழில்:. College,Teacher
எதிர்பார்ப்பு-உயர்பதவி
தொ.இ: G/15366

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: Cleaner
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15367

பிறப்பு -2001- RC
நட்சத்திரம்:விசாகம்
உயரம் :5'
தகைமை/தொழில்:BA(following)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15368


இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்


# உக்ரைன் - ரஷ்யப் போருக்கு ஜெலன்ஸ்கி தான் காரணம்!

## மீண்டும் சாடினார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் மீது நடந்த ரஷ்யாவின் போருக்கு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தான் காரணம் என்று மீண்டும் தெரிவித்துள்ளார்.



அத்தோடு, தனது சக்தியை விடவும் 20 மடங்கு சக்திவாய்ந்த ஒருவரிடம் போரைத் தொடங்குவது மூடத்தனம் என்றும் அவர் ஜெலன்ஸ்கியை விமர்சித்துள்ளார்.

மில்லியன் கணக்கான மக்கள் உயிரிழந்துள்ள இந்தப் போருக்கான காரணமாக அவர் மூன்று பேரை குறிப்பிட்டுள்ளார்.

அதில் முதலாவதாக புடினையும் இரண்டாவதாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனையும் மூன்றாவதாக ஜெலன்ஸ்கியையும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த போரை நிறுத்துவதற்காக தான் முயற்சி செய்து வருவதாகவும், விரைவில் அது தொடர்பான நல்ல யோசனை வரலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# கிராமத்துக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு

## 40 பேர் உயிரிழப்பு

### நைஜீரியாவில் சோகம்

(நைஜர்)

நைஜீரியாவின் வட மேற்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் இரு குழுக்கள் இடையே நீண்டகாலமாக மோதல் இருந்து வருகிறது.



இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரு கிராமத்துக்குள் துப்பாக்கிகளுடன் புகுந்த கும்பல் ஒன்று ஜைகே (ZIKE) எனப்படும் விவசாய சமூகத்தினரை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தியது.



இதில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பாஸ்சா பகுதியில் உள்ள ஜிக் சமூகத்தினரின் வீடுகளை அழித்து சூறையாடினர்.

இதுதொடர்பாக நைஜீரியா ஜனாதிபதி போலா டினுபு கூறும்போது. இந்த நெருக்கடியை முழுமையாக விசாரித்து. வன்முறைச் செயல்களைத் திட்டமிட்டதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காணுமாறு பாதுகாப்பு நிறுவனங்களுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன் எனத் தெரிவித்தார். (நி-8)

# நெருப்புடன்

## முகமது யூனுஸ் அர

(டாக்கா)

வங்கதேசத்தில் கடந்த வருடம் வெடித்த மாணவர் போராட்டத்தின் பின் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பால் அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

இதன்பின் அந்நாட்டில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு அமைந்தது.

கடந்த ஒகஸ்ட் முதல் இந்தியாவில் உள்ள ஷேக் ஹசீனா மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

முகமது யூனுஸ் அரசை ஷேக் ஹசீனா தொடர்ந்து விமர்சித்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## விண்வெளிக்கு சென்று திரும்பிய பெண்கள் குழு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் முதன் முறையாக முழுவதும் பெண்கள் அடங்கிய குழுவினர் விண்வெளிக்கு பயணம் செய்து திரும்பி புதிய சாதனையைப் படைத்துள்ளனர்.

உலகம் முழுவதும் விண்வெளி ஆராய்ச்சி உச்சத்தை தொட்டுவிட்ட நிலையில் கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவில் விண்வெளி சுற்றுலாவுக்காக தனியார் விண்வெளி மையங்களும் தொடங்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

அந்த வகையில் எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் அமேசன் நிறுவனர் ஜெஃப் பெசோசின் ப்ளூ ஆரிஜின் விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவை.

சமீபத்தில் ப்ளூ ஆரிஜின் முழுவதும் பெண்கள் அடங்கிய ஒரு குழுவை விண்வெளி சுற்றுலா அழைத்து செல்லத் திட்டமிட்டது.

அதன்படி ஜெப் பெசோசின் வருங்கால மனைவி லாரன் சான்செஸ், பாப் பாடகி கேட்டி பெரி, நாசா விஞ்ஞானி ஆயிஷா பாவே உள்ளிட்ட 6 பெண்கள் விண்வெளிக்குப் பயணம் செய்தனர். நியூ ஷெப்பர்ட் விண்கலத்தில் புறப்பட்ட அவர்கள் விண்வெளிக் குள் சென்று சில மணி நேரங்களை கழித்து பத்திரமாக பூமியை வந்தடைந்துள்ளனர்.

இந்தப் பயணம் மூலம் விண்வெளி வரலாற்றில் முதன் முறையாக முழுவதும் பெண்கள் மட்டுமே அடங்கிய குழு செய்த முதல் விண்வெளிப் பயணமாக இந்தப் பயணம் சாதனை படைத்துள்ளது. (நி-8)

## நிலநடுக்கத்தால் குலுங்கிய அமெரிக்கா

### குட்டிகளைக் காப்பாற்ற யானைகளின் நெகிழ்ச்சி செயல்

### வைரலாகும் வீடியோ



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள சான்டியாகோ நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவானது.

உள்ளூர் நேரப்படி காலை 10.08 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் மலை நகரமான ஜுலியனில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சான்டியாகோ கவுண்டியில் மையம் கொண்டிருந்தது.

இது சுமார் 193 கிலோமீற்றர் தொலைவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி வரை வடக்கே உணரப்பட்டது. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பல பின் அதிர்வுகள் ஏற்பட்டன.

நிலநடுக்கத்தை தொடர்ந்து கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

சான்டியாகோவிற்கு வெளியே உள்ள கிராமப்புற சாலைகளில் பாறைகள் சரிந்து விழுந்தன. நிலநடுக்கத்தால் பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நிலநடுக்கம் ஏற்பட்ட சமயத்தில் சான்டியாகோ மிருகக் காட்சிசாலை சஃபாரி பூங்காவில் ஆபிரிக்க யானைகளின் கூட்டம் தங்கள் குட்டிகளை பாதுகாக்க செய்த செயல் கவனத்தை ஈர்த்துள்ளது.

நில அதிர்வை உணர்ந்த யானைக் கூட்டத்தின் மூத்த யானைகள் உள்ளுணர்வால் தூண்டப்பட்டு, கூட்டமாக தங்கள் குட்டிகளை சூழ்ந்து பாதுகாப்பு அரணாக நின்ற காட்சிகள் மெய்சிலர்க வைப்பதாக உள்ளது. (நி-8)

## ... விளையாடாதீர்கள்!

### ...க்கு ஷேக் ஹசீனா கடும் எச்சரிக்கை

...தினம் தனது அவாமி லீக் கட்சி ஆதரவாளர்களிடம் வீடியோவில் உரையாற்றிய அவர், வங்கதேசத்தின் வரலாற்றை, குறிப்பாக நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் அவாமி லீக்கின் பங்களிப்புடன் தொடர்புடையவற்றை யூனுஸ் அழித்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார்.

அவர் கூறியதாவது, வங்காளதேச சுதந்திர இயக்கத்தின் அனைத்து அடையாளங்களும் அகற்றப்படுகின்றன. சுதந்திரப் போராளிகள் அவமதிக்கப் படுகிறார்கள். அவர்களின் நினைவுகளை உயிர்ப்புடன் வைத்திருக்க அனைத்து மாவட்டங்களிலும் நினைவகங்களை நாங்கள் கட்டினோம், ஆனால் அவை தற்போது எரிக்கப்படுகின்றன.

யூனுஸால் இதை நியாயப்படுத்த முடியுமா? நீங்கள் நெருப்புடன் விளையாடினால் அது உங்களையும் எரித்துவிடும். அதிக அளவு கடன் வாங்கும் அந்த நபர் (யூனுஸ்), அதிகாரப் பசி, பணப்பசிக்காக வெளிநாட்டுப் பணத்தை வைத்து நாட்டை அழிக்கிறார்.

வங்கதேச தேசிய கட்சி மற்றும் ஜமாத் இஸ்லாமிய கட்சியைச் சேர்ந்தவர்கள் அவாமி லீக் தலைவர்களை துன்புறுத்துகிறார்கள்" என்று தெரிவித்தார். (நி-8)



## ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கான நிதியை நிறுத்தினார் அமெரிக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)

சிவில் உரிமைகள் சட்டங்களை நிலை நிறுத்தும் பொறுப்பைக் கடைப்பிடிக்காத பல்கலைக்கழகங்களுக்கு நிதி கிடைக்காது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஹார்வர்ட் பல்கலைக் கழகத்திற்கான 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியை நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிவில் உரிமைகள் சட்டங்களை நிலை நிறுத்தும் பொறுப்பைக் கடைப்பிடிக்காத பல்கலைக்கழகங்களுக்கு நிதி கிடைக்காது. கடந்த சில ஆண்டுகளாகவே பல்கலைக் கழகங்களில் கற்றல் நடவடிக்கைகள் சீர்குலைந்து வருகிறது.

யூத மாணவர்கள் மீதான துன்புறுத்தல் அதிகரித்து வருவதை ஏற்க முடியாது. பல்கலைக்கழகங்கள் இந்தப் பிரச்சினையைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு அர்த்தமுள்ள மாற்றத்தைச் செய்ய வேண்டிய நேரம் இது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகங்களில் காசா போர் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதை தடுக்க பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து பல்கலைக் கழக வளாகத்தில் மாணவர்களின் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில் ட்ரம்ப் நிர்வாக உத்தரவுக்கு இணங்கப்போவதில்லை என ஹார்வர்ட் பல்கலைக்கழகம் அறிவித்ததுடன் மாற்றங்களை செய்ய வலியுறுத்தியதையும் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபோதையில் சாரத்தியம் தொடரும் கைதுகள்

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருளைப் பயன்படுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கையும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-8)

## கடந்த வருடத்தில் மட்டும்

# 3 லட்சத்திற்கும் அதிகமானோர் வெளிநாடுகளுக்குப் பயணம்

(கொழும்பு)

கடந்த வருடத்தில் மாத்திரம் 314,828 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கையானது 5.8 சதவீதம் அதிகமாகுமென வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2023ஆம் ஆண்டில் 297,656 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 170 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 500 | 700 |
| தக்காளி | 550 | 600 | 650 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 250-300 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 400 |
| கரட் | 450 | 600 | 500 | 700 |
| பூசணி | 220 | 200 | 180 | 200 |
| புடோல் | 250 | 200 | 220 | 320 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 200 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 150 | 150 | 150 |
| பாகற்காய் | 500 | 400 | 450 | 500 |
| வெண்டக்காய் | 350 | 200 | 300 | 450 |
| கருணைக் கிழங்கு | 400 | 250 | 200 | 320 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150-250 | 300 |
| லீக்ஸ் | 300 | 500 | 250 | 400 |
| பீற்றூட் | 400 | 300 | 400 | 500 |
| கறிமிளகாய் | 500 | 500 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 2500 | 1400 | 2500 | 2400 |
| போஞ்சி | 550 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | - | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 80 | 200 | 100 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 280 | 150 | 200 | 200-250 |
| இராசவள்ளி | 700 | 500 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 350 | 200 | - | 600 |
| முள்ளங்கி | 150 | 180 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 60 | 80 | 100 |
| ஈரப்பலா | -- | 250 | - | 240 |

# இன்று ஒரு தகவல் 358



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மற்றவர் மகிழ்ச்சி

இந்த உலகத்திலே நாம் மட்டும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது அது சாத்தியமில்லாத விடயம்.

பக்கத்தில் இருப்பவர்களும் சந்தோசமாக இருந்தால் தான் நாமும் சந்தோசமாக இருக்க முடியும்.

இதைப் பற்றி விபரமாக சொல்கிறேன். அதற்கு ஒரு கதை இருக்கிறது.

ராஜ்யவர்த்தனன் என்று ஒரு ராஜா இருந்தார்.

அந்த ராஜா 7000 வருடம் தன்னுடைய இராஜாங்கத்தை நல்லபடியாக நிர்வாகம் செய்து வந்தார்.

7000 வருடம் எப்படி ஒருவர் இருக்க முடியும் என்கின்ற சந்தேகம் வருகிறதா? இது ஒரு புராணக்கதை.

மக்கள் எல்லோருக்கும் அந்த ராஜா பெயரிலே மிகவும் மரியாதை உண்டு.

ஒரு நாள் ராணி அந்த ராஜாவுக்கு தலையிலே எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார்.

திடீர் என்று அந்த அம்மா கண் கலங்க ஆரம்பித்தார். என்ன விடயம் ஏன் கண் கலங்குகிறாய் என்று ராஜா கேட்டார்.

உங்கள் தலையிலே ஒரு முடி நரைத்திருக்கிறது என்றார். உங்களுக்கு வயதாகி விட்டது என்று தானே அர்த்தம்? எனக்கு கவலையாக போய் விட்டது. அதுதான் அழுதேன்!

இதுக்குப் போய் யாராவது அழுவார்களா? இது எமன் எனக்கு கொடுத்திருக்கிற எச்சரிக்கை. நான் உடனே காட்டுக்குப் போய் தவம் செய்ய வேண்டும் என்றார் ராஜா.

நானும் கூட வருவேன் என்றார் ராணி.

ராஜாவும் ராணியும் காட்டுக்குப் போனால் மக்களின் நிலைமை என்ன ஆகும்.

நீங்கள் இரண்டு பேரும் காட்டுக்குப் போக வேண்டாம் என்று கூறி ஜனங்கள் எல்லாம் மிகவும் தூரத்திலே இருந்த ஒரு சூரிய ஆலயத்திற்குப் போனார்கள். சூரியனை நோக்கித் தவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

மூன்று மாதம் ஆனது. சூரிய பகவான் நேரிலே காட்சி கொடுத்தார். உங்களுக்கு என்ன வரம் வேண்டும் கேளுங்கள் என்றார்.

எங்கள் ராஜா இன்னும் 10,000 வருடங்கள் நோய்நொடி இல்லாமல் இளமையோடு எங்கள் தேசத்தை ஆள வேண்டும் என்றார்கள்.

சரி அப்படியே வரம் தந்தேன் என்று சொல்லி சூரிய பகவான் சென்றுவிட்டார். ராஜாவுக்கு இந்த விடயம் தெரிந்தது ஆனால் அவர் சந்தோசப்படவில்லை. வருத்தப்பட்டார்.

மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக வருத்தப்படுகிறீர்களே ஏன் என்று கேட்டார் ராணி.

இந்த வரத்தால் நான் எப்படி சந்தோசப்பட முடியும். நான் 10,000 வருடங்கள் உயிரோடு இருக்கலாம். ஆனால் நீ இருக்க மாட்டியே! இந்த வரத்தை வாங்கிக் கொடுத்த மக்கள் இருக்க மாட்டார்களே! என்றார் ராஜா.

என்னுடைய ராணியும் எனக்குப் பிரியமான மக்களும் இல்லாமல் நான் மட்டும் 10,000 வருடங்கள் எப்படி சந்தோசமாக இருக்க முடியும்? என்றார் ராஜா.

அதன் பிறகு அந்த ராஜாவும் ராணியும் அதே சூரியன் ஆலயத்திற்குப் போனார்கள். தவம் செய்தார்கள். நாட்டிலே இருக்கிற எல்லோரும் 10,000 வருடங்கள் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று வரம் வாங்கினார்கள். அதற்குப் பிறகு எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். இதுதான் இந்தக் கதை.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால் நாம் சந்தோசமாக இருக்க வேண்டும் என்றால் மற்றவர்களும் சந்தோசமாக இருக்க வேண்டும்.

அந்தக் காலத்திலே அப்படி இருந்தார்கள். இந்தக் காலத்திலே அப்படியா இருக்கிறார்கள்.

அலுவலகத்திலே வேலை பார்க்கிற ஒருவர் தன்னுடைய மேனேஜரிடம் போனார். சேர் இந்த அலுவலகத்திலே நீங்கள் சந்தோசமாக இருந்தால் தான் நான் சந்தோசமாக இருக்க முடியும். நீங்கள் சந்தோசமாக இருப்பதற்கு என்ன வழி என்று கேட்டார். அது உன் கையில்தான் இருக்கிறது என்றார் மேனேஜர். எப்படி என்று கேட்டார் இவர். நீ ரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு வேறு ஊருக்குப் போய்விடு அதுபோதும் நான் சந்தோசமாக இருப்பேன் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டின் எதிர்பார்ப்பு
## பேண்தகு அபிவிருத்தி இலக்கில் பயணிக்குமா?



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வளங்கள் பலவற்றைக் கொண்ட உயர் பல்வகைத் தன்மையின் பொக்கிஷமாக கருதப்படும் இவ்வழகிய தீவில் பலவகையான காலநிலைகளும் பயிருற்பத்திக்கான மண் வகைகளும் காணப்படுகின்றன.

எமது நாடு விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி என்பனவற்றை வளங்களாக கொண்டுள்ளதுடன் இங்குள்ள சனத்தொகைக்கான உணவினை உற்பத்தி செய்யும் வல்லமையை கொண்ட நாடாகவும் திகழ்கின்றது. எங்களூரில் திருந்திய பயிரினங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அனைத்து மக்களுக்குமான உணவு ஓரளவிற்கு கிடைத்ததனால் பசி பட்டினியின் எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பலவகை உணவுப்பொருட்கள் அந்தந்த காலபோகங்களுக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டதனால் மக்கள் இன்னமும் அந்த விவசாய விளைநிலத்தில் வாழ்ந்ததனால் விவசாயத்தை தக்கவைத்துக் கொண்டனர். மறுபக்கத்தில் விவசாய உற்பத்தி மற்றும் அதனது ஸ்திரத்தன்மையில் முக்கிய பங்காற்றுகின்ற விவசாய கொள்கைத் திட்டங்கள் மாற்றமடைந்ததனால் அவற்றிலேற்பட்ட அதிரடி மாற்றங்கள் விவசாய உற்பத்தியின் அபிவிருத்தியை அதன் நீண்ட நாள் கனவை தகர்த்து பலவீனமாக்கியுள்ளதெனலாம்.

கொள்கை மாற்றங்கள் ஆட்சிமாற்றங்களில் முழுமையாக தங்கியிருப்பதுவும் பொருளாதார ஸ்திரத்தன்மையில் ஏற்படும் சரிவும் இவற்றுடன் அபிவிருத்தி இலக்குகளை மையப்படுத்திய அனைத்து செயற்பாடுகளும் வளர்ந்து வரும் நாடு போன்ற இலங்கைக்கு ஏற்புடையதல்ல.

ஐக்கிய நாடுகள் தாபனத்தால் முன்னகர்த்தப்படும் 17 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் நிர்ணயம் 2030 ஆம் ஆண்டில் அனைத்து நாடுகளிலும் நடைமுறைக்கு வர வேண்டும். இந்த அடைவு எட்டப்படுவதற்கு பல வழிகளில் முயற்சிக்கப்பட்ட திட்டங்களனைத்தும் பொருளாதார சீர்குலைவினால் தடைப்பட்டும் முழுமை பெறுவதில் சிக்கல்களையும் எதிர்நோக்கியுள்ளன.

சுற்றுசூழல் மாசுபடுதலில் கணிசமான பங்களிப்பு அசேதன விவசாய உள்ளீடுகளாலும் விவசாய இரசாயனங்களினாலும் ஏற்படுத்தப்படுவதை பலஆய்வு மாநாடுகளில் பல்துறைவல்லுநர்கள் சுட்டிக்காட்டியதும் பல கருத்தரங்குகளில், கட்டுரைகளில் இன்னமும் பத்தி எழுத்துக்களில் சூழல் மாசடைதலுக்கு தீர்வுகளாக பல விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆட்சியாளர்கள் பின்விளைவுகள் எதைப் பற்றியும் சிந்தியாது விரைந்து சேதன விவசாய நாடாக இலங்கையை மாற்ற முனைந்தமையும் அதற்காக அசேதன விவசாய உள்ளீடுகளாக வழமையாக இறக்குமதி செய்யப்படும் அசேதன இரசாயன பசளைகளை தடைசெய்தமையும் காரணமாகிவிட்டது.


தற்போது தடைசெய்யப்பட்டவைகளுடன் இன்னும் புதிய அசேதன இரசாயன பசளைகள் மற்றும் பீடைநாசினிகள் அனைத்தும் தாராளமாக கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது. விவசாய உள்ளீடு என்பதனை தவிர்த்துப் பார்த்தால் மீண்டும் சுற்றுச்சூழல் மாசுறப்போகின்றது. அதனாலான தாக்கம் அதிகரிக்கப் போகின்றது.

### இனியொரு பசுமைப்புரட்சிக்கு...









அதிலொரு விடயமாக மக்களிடையே அதிகரித்திருக்கும் பலவகையான புற்றுநோய்களும் அதனால் அதிகரித்திருக்கின்ற இழப்புக்களும் இவற்றுக்கு இனி முன்பு துணிந்தது போல யாரும் இவற்றை தடைசெய்ய முன்வரார்.

எமது நாட்டின் பொருளாதார வீழ்ச்சி (Economy crisis) மக்களனைவரையும் தனி மனித மற்றும் குடும்ப பொருளாதார சுமையுடன் அடுத்த பத்துப்பதினைந்து ஆண்டுகளுக்கு பயணிக்க நிர்ப்பந்தித்திருக்கின்றது. கொள்கைகளை வடிவமைப்பதில் அவசரமும் புதுமையாய் செய்யமுனைந்தமையும் அனுபவம் இல்லாதவர்களால் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்த முனைந்த போதே அவற்றின் செயலாக்கத்தில் தளம்பல் தோன்றி விட்டது.

அந்த வீழ்ச்சி நாட்டின் ஸ்திரத்தன்மையையே ஆட்டங்காண செய்து ஆட்சி மாற்றத்தையும் ஏற்படுத்தி விட்டது. பொருளாதார சுமையை சுமக்கும் நிலையில் இத்தீவில் மக்கள் இல்லையென்பது அந்தச் செய்தி.

எமது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையின் வீழ்ச்சி விவசாய அபிவிருத்தியில் பலதடைகளையும் முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது. கடந்த மூன்றாண்டுகளாக நாட்டுமக்கள் பலப்பரீட்சையையே நடாத்தவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

மாறாக எமக்குள்ளே வலிந்து திணிக்கப்பட்ட உள்நாட்டுப் போரின் காரணமாக எமது வளங்கள் வகைதொகையின்றி அழிக்கப்பட்டு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டு மக்களின் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டு வலிமையற்ற தேசத்து மக்களாக ஆக்கப்பட்டு அந்த மனித பேரிடர் முழு நாட்டையுமே நலிவுற்றதாக பயிர் அபிவிருத்தியை தக்கவைக்க முடியாமல் பொருளாதாரத்தை சாய்த்துவிட்டது.

அழிவுக்குள்ளான பிரதேசங்கள் மீளக்கட்டியமைக்கப்படுதலில் ஏற்படுகின்ற தாமதம், இடம்பெயர்ந்த மக்கள் புலம்பெயர்ந்திருப்பதாலும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் போரின் உக்கிரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக அங்கவீனர்களாக அல்லல்படுவதனாலும் அநேகமான குடும்பப் பெண்களின் உழைப்பு மழுங்கடிக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றை விட பொருளாதார ரீதியிலும் விவசாயப் பெருமக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பிந்திய காலங்களில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மக்களின் வாழ்வாதாரத்தை மேலும் பாதித்திருக்கின்றது. பொருளாதார சரிவென்பதை எக் காலத்திலும் அனுமானித்திருக்காமையே இவ்வாறான சரிவினை கண்டிருப்பதும் இதன் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட சமூகமாக விவசாயிகள் இருக்கின்றனர்.

பேண்தகு அபிவிருத்தியினை எட்டுவதற்கு நம் நாடு இன்னும் பலமாக திட்டமிடுவதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அதிக அக்கறை செலுத்த வேண்டும். உணவுக்கான விவசாய உற்பத்தியில் மாத்திரம் நாம் தங்கியிருந்தாலும் உணவை நேரடியாக உற்பத்தி செய்யும் விளைபொருட்களிலிருந்து பெறுவதிலும் பார்க்க விளை பொருட்களை மதிப்பேற்றஞ் செய்வதிலும் குறிப்பாக அவற்றை விவசாயஞ் சார்ந்த தொழிற்றுறையின் உட்பொருளாக மாற்றும் போது இவ்வாறான தொழிற்றுறையின் விருத்தியுடன் அது சார்ந்த வேலைவாய்ப்புக்களும் அதிகரிப்பதுடன் புதிய பொருட்களின் உற்பத்தியும் உருவாக்கப்படும் நிலையும் எழும்.

இவ்வாறான தரமான மாற்றுப் பொருட்கள் வெளிநாட்டுச் சந்தையை நோக்கியதாக காணப்படும் போதுமட்டுமே அவ்வாறான பொருட்களின் விற்பனையால் எமது அந்நியசெலாவாணி உயர்வடையும். குறிப்பாக வடமாகாணத்தின் அந்நிய செலாவாணி பங்களிப்பை அதிகரிப்பதற்கான உத்திகள் முழுமையாக பயனளிக்கும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

கியூபா நாடு பேரழிவிலிருந்து மீண்டது போல எமது நாடும் இடர்களுக்கு மத்தியிலும் அந்த இலக்கை நோக்கி நகர்ந்தே ஆக வேண்டும். காலந் தாழ்த்தியென்றாலும் நாட்டின் தன்னிறைவை அடைந்ததாக இருத்தல் வேண்டும். இப் புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சமான வாழ்க்கையையும் அவர்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தையும் அவசியம் தரும் என எதிர்பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 749





அங்குமிங்கும் தங்கித் தொல்லை கொடுத்துக் கொண்டுதானிருந்தார்கள். காஞ்சி நகர் அவர்கள் வசத்திலே தான் இருந்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நீ வீரபாண்டியனை முறியடித்த பிறகு இந்தப் பக்கம் வந்துதான் காஞ்சி நகரை மீட்டாய்"

ஆதித்த கரிகாலன் மீண்டும் குறுக்கிட்டு, "தாத்தா! இதெல்லாம் எனக்கு முன்னமே தெரிந்ததுதான்! ஆனால் தக்கோலப் போரைப் பற்றியும் இராஜாதித்யர் வரலாற்றையும் எத்தனை தடவை கேட்டாலும் எனக்கு அலுப்பதில்லை. இப்போது இராஜாதித்யரைப் பற்றி எனக்கு எதற்காக நினைப்பூட்டினீர்கள்? அதைச் சொல்லுங்கள்!" என்றான்.

"குழந்தாய்! உன் பெரிய பாட்டனார் இராஜாதித்யர் சோழ சாம்ராஜ்யத்தை இலங்கை முதல் கங்கை நதி வரையில் விஸ்தரிக்க ஆசை கொண்டிருந்தார். அந்த ஆசை நிறைவேறாமலே உயிர் நீத்தார். அவரைப் போன்ற மகாவீரன் என் பேரன் ஆதித்த கரிகாலன் என்று நாடு நகரமெல்லாம் பேச்சாயிருக்கிறது. அவர் சாதிக்க நினைத்த காரியத்தை நீ சாதிக்கப் போகிறாய் என்று இத்தமிழகமெங்கும் ஜனங்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இராஜாதித்யரைப் போல நீயும் வஞ்சத்திற்கு ஏமாந்து போகக்கூடாது என்பதற்காகவே அவருடைய வரலாற்றை உனக்கு நினைவூட்டினேன்"

"தாத்தா! என் பெரிய பாட்டனார் போர்க்களத்தில் பகைவர்களின் வஞ்சனையினால் உயிரை இழந்தார். அதை இப்போது எனக்கு எதற்காக நினைவூட்டுகிறீர்கள்? நான் போர்க்களத்துக்குப் போகவில்லையே? என்னை வஞ்சிக்கக் கூடிய பகைவர்களின் மத்தியிலும் போகவில்லையே? என் தந்தையின் அத்யந்த நண்பர்களையல்லவா பார்க்கப் போகிறேன்? அவர்கள் என்னை எந்த விதத்தில், எதற்காக வஞ்சிக்கப் போகிறார்கள்?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"கேள், கரிகாலா! எதிரிகள் தொழுத கையிலும் அழுத கண்ணீரிலும் கொடிய ஆயுதம் இருக்கக்கூடும் என்று கூறிய திருவள்ளுவர் பெருமான், வெளிப்பகையைக் காட்டிலும் உட்பகை கொடியது என்றும் கூறியிருக்கிறார்.

'வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக கேள்
போல் பகைவர் தொடர்பு'

வாளைப் போல் வெளிப்படையாக எதிர்த்து நிற்கும் பகைவர்களிடம் பயம் வேண்டியதில்லை. சிநேகிதர்களைப் போல் நடிக்கும் பகைவர்களிடமே பயப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். குழந்தாய்! கேளிரைப் போல் நடிக்கும் பகைவர்களின் மத்தியில் இப்போது போகிறாய்.

நான் வேண்டாம் என்று தடுத்தும் கேளாமல் நீ போகிறாய். ஏதோ ராஜ்யம் சம்பந்தமாகத் தகராறு நேர்ந்து விட்டதாகவும் அதைத் தீர்த்து வைக்கப் போவதாகவும் உன்னை அழைத்திருக்கிறார்கள். சம்புவரையன் மகள் ஒருத்தியை உன் கழுத்தில் கட்டிவிட உத்தேசித்து உன்னை அழைத்திருப்பதாகவும் அறிகிறேன். ஆனால் அவர்களுடைய உண்மையான நோக்கம் இன்னதென்பது எனக்கும் தெரியாது. நீயும் அறிந்திருக்க முடியாது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வயதான சிங்கமும் புத்திசாலி நரியும்



ஒரு காட்டில் ஒரு சிங்கம் வாழ்ந்து வந்தது.

அந்தச் சிங்கதிற்கு ரொம்ப வயதாகி விட்டது. அதனால் அதனுடைய பல் எல்லாம் தேய்ந்து போய் நகம் எல்லாம் பிஞ்சு போய் இருந்தது.

அதனால்அந்த வயதான சிங்கம் வேட்டையாடி உணவு உண்ண முடியவில்லை.

அதனால் காட்டில் இருக்கின்ற மிருகங்களிடம் தனக்கு வயதாகி விட்டது அடுத்த ராஜாவாக வருதற்கு யாருக்கெல்லாம் விருப்பமோ அவர்கள் எல்லோரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தராக சிங்கத்தின் குகைக்குப் போய் சிங்க ராஜா கேள்விக் குப் பதில் சொல்லி போட்டியில் ஜெயித்து புது காட்டு ராஜாவாக ஆகி[illegible] என்று அறிவிப்பு செய்தது.

இதைக் கேள்விப் பட்ட மிருகங்கள் காட்டு ராஜாவாக ஆகின்ற ஆசையில் ஒவ்வொன்றாக சிங்கத்தின் குகைக்கு போகத் தொடங்கின.

ஆனால் அந்த வயதான சிங்கம் அந்த மிருகங்கள் குகைக்குள் வந்ததும் அவற்றைச் சுலபமாக பிடித்து சாப்பிட்டுக் கொண்டே இருந்தது.

ஒருநாள் ஒரு புத்திசாலி நரி சிங்கத்தைப் பார்க்க வந்தது. அப்போது அந்த வயதான சிங்கம் வாசலில் படுத்திருந்தது.

நரியைப் பார்த்ததும் ஒஹ் காட்டு ராஜா போட்டிக்கு வந்தீர்களா உள்ளே வாருங்கள் என்று குகைக்குள் கூப்பிட்டது சிங்கம்.

ஆனால் புத்திசாலியான நரி சிரித்துக் கொண்டே சொல்லியது , அரசே உங்கள் குகை வாசலில் நிறைய மிருகங்களின் காலடித் தடம் இருக்கிறது. ஆனால் ஒரு மிருகம் கூட வெளியில் வந்த மாதிரி தெரியவில்லை.

அதனால் உங்களின் சூழ்ச்சி எனக்கு தெரிந்து விட்டது என்று சொல்லி அங்கு இருந்து வேகமாக ஓடிப் போனதோடு மட்டும் இல்லாமல் அடுத்து எந்த மிருகமும் சிங்கத்தை தேடிவராமல் பார்த்துக் கொண்டது.

நீதி: புத்திசாலிகள் தோற்பதில்லை, பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் தூய்மையாக வைத்திருக்க வேண்டிய இரண்டு இடங்கள் நம் மனம் மற்றும் உள்ளம்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆலய உற்சவங்களின் போது அரசியல்வாதிகளைத் தவிருங்கள்

பார்க்குமிடமெங்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் நாம் ஒவ்வொருவரும் இறைவனை சதா நினைக்க வேண்டும் என்பதாகும்.

ஆம், மனம் என்பது ஒருபோதும் வெறுமைப்படாது. அதாவது ஏதோவொரு சிந்தனை வயப்படுவது மனதின் இயல்பு.

எனவே அலைபாய்கின்ற மனம் நல்லதை – உயர்ந்த சிந்தனைகளை நினைக்குமாயின், அதன் விளைவுகளும் சாதகமாக அமையும்.

இதை இன்னும் ஒரு படி மேற்சென்று கூறுவதாயின், மனச் சிந்தனைக்கும் நம் வாழ்வில் நடக்கின்ற சம்பவங்களுக்கும் நிறைந்த தொடர்பு உண்டு.

அதனாலேயே **உள்ளுவதெல்லாம் உயர்வு** என்றும் **நீ எதை எண்ணுகிறாயோ அதுவாகவே நீ ஆகிறாய்** என்றும் **மனம் போல் வாழ்வு** எனவும் நம் ஞானியர்கள் கூறிவைத்தனர்.

ஆகவே ஒருபோதும் எதிர்மறையான சிந்தனைகளை நினைத்துவிடாதீர்கள். அத்தகைய எதிர்மறைச் சிந்தனைகள் எதிர்விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

இதனாலேயே இறை சிந்தனையுடன் நாம் வாழும்போது, மனத்தாலும் பிறர்க்குத் தீங்கு எண்ணாத பக்குவத்தை நாம் அடைய முடியும்.

இதற்காகவே ஆலய வழிபாடுகளும் விரத தினங்களும் உற்சவங்களும் திருவிழாக்களும் கும்பாபிசேகங்களும் ஆலயங்களில் ஆற்றப்படுகின்றன.

உண்மை. உபவாசம் இருப்பதன் நோக்கம் புலன் வழிப்போகாமல், ஐம்புலன் தன்னை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி இறைபரம் பொருளை வழிபடுவதாகும்.ஆக, இங்கு மன ஒடுக்கமும் இறைவழிபாடுமே முதன்மைக்குரியவை.

எனினும் நாம் நோக்கத்தை மறந்து செயற்படுகின்றோம். ஆம், மகா கும்பாபிசேகம் நடைபெறுகிறது. மகா குடமுழுக்கைக் கண்ணாரக் கண்டுவிட வேண்டும் என அடியார் கூட்டம் காத்திருக்கிறது.

எனினும் குடமுழுக்கு இடம்பெறும்போதும் தீபாராதனை நடைபெறும் வேளையிலும் அங் கிருக்கக்கூடிய அர்ச்சகர்கள் அவற்றை மறைத்து நேரெதிரே வருவார்கள்.

என்ன செய்வது, இதனை அவர்களுக்குச் சொல்வதற்கும் ஆளில்லை. அவர்களும் புரிந்து கொள்வதாக இல்லை. இந்த அபத்தம் அநேகமான ஆலயங்களில் இடம்பெறுவது துரதிர்ஷ்டமே.

**உண்மையில் இஃது மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தக்கூடியது. இதுபோன்று முக்கிய திருவிழாக்கள், கும்பாபிசேகங்களின்போது அரசியல் தலைவர்களை – ஆட்சியாளர்களை அழைக்கும்போது அங்கு கவனக் கலைப்பு ஏற்படும்.**

இதனால் பக்திபூர்வமாக வழிபடுகின்ற அந்தச் சூழமைவு இல்லாமல் போக, நோக்கம் பிழைத்து விடுகிறது.

எனவே ஆட்சித் தலைவர்கள் – அவர்களையொட்டி அரசியல் பிரமுகர்கள் – படையினர் என்ற பிரசன்னங்களை முற்றறத் தவிர்ப்பது மிக மிக அவசியம்.

இது அரசியல்வாதிகள் மீது கொண்ட காழ்ப்புணர்வு என்று யாரும் கருதிவிடாதீர்கள். மாறாக, பக்தி பழுதின்றி இருப்பதற்கானது என்றுணர்க.

# தமிழினப் படுகொலைக்கு உள்ளக விசாரணை பட்டலந்தப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை

## தே.ம.சக்தி அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை எடுத்தியம்பினார் கஜேந்திரகுமார் எம்.பி

இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளக ரீதியில் மாத்திரமே தீர்வு வழங்கப்படும் எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பட்டலந்த விவகாரத்தில் மாத்திரம் சர்வதேச விசாரணையினைக் கோரத் தயாராக இருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக் காட்டினார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை தமிழ் மக்கள் அறிந்த விவகாரமாக பட்டலந்த விசாரணை அமைந்துள்ளது.

இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலும் சர்வதேச விசாரணைகளை மூடி மறைக்கும் செயற்பாடுகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஈடுபட்டு வருகின்றது.

பட்டலந்த வீட்டுத்திட்ட குடியிருப்பில் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமது தோழர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு சர்வதேச தரப்புக்களை இணைத்து மேற்கொள்வதற்கு தயார் எனத் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான இனப்படுகொலைகளை சர்வதேச நீதியில் விசாரிப்பதற்கு மறுத்து உள்ளூர் விசாரணை மூலம் தீர்வு என்கின்றனர் எனச் சுட்டிக்காட்டினார்.

பட்டலந்தவில் படுகொலை செய்யப்பட்ட தமது ஜே.வி.பி தோழர்களுக்கு சர்வதேச தரப்புக்களை அழைத்து விசாரணைக்குத் தயார் எனக் கூறும் தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கும் போர்க் குற்றங்களுக்கும் ஏன் சர்வதேச விசாரணைகளுக்கு மறுக்கிறார்கள் என இதன்போது கஜேந்திரகுமார் எம்.பி கேள்வி எழுப்பினார்.

மேலும், தமிழ் மக்களை தத்துவார்த்த ரீதியாக அழிப்பதற்கு பல்வேறு செயற்திட்டங்களை வகுத்துக் கொடுத்த தற்போதைய தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் விரட்டியடிப்பதற்கான காலம் கனிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். *(ம-4,7)*

## வீதி விபத்தில் முதியவர் படுகாயம்

### உப்புமடப்பகுதியில் சம்பவம்

காங்கேசன்துறை வீதியின் உப்புமடம் சந்திக்கு அருகாமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

உந்துருளி, ஈருருளி என்பன மோதுண்டதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் ஈருருளியில் பயணித்த கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த முதியவர் காலில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் நோயாளர் காவுவண்டி மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். *(ம-4.7)*

## மனித நுகர்வுக்கு ஒவ்வாத உணவுப் பண்டங்கள் அழிப்பு

**ஒட்டுசுட்டானில் சுகாதாரப்பரிசோதகர்கள் அதிரடி**

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதியில் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற வகையில் இருந்த வெதுப்பக உற்பத்திப் பொருட்கள் சுகாதாரப் பரிசோதகர்களால் அழிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட முத்தையன் கட்டு மற்றும் ஒட்டுசுட்டான் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் உள்ள உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இதன் போது வெதுப்பகங்கள் மற்றும் உணவகங்களில் அடையாளம் காணப்பட்ட மனித நுகர்விற்கு பொருத்தமற்ற வகையில் இருந்த வெதுப்பக உற்பத்திப் பொருட்கள் அழிக்கப்பட்டதுடன் குறித்த பகுதி வெதுப்பகங்களில் உள்ள சுகாதாரச் சீர்கேடுகள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றுக்கான உரிய தீர்வுகளும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களினால்முன்மொழியப்பட்டன.

அத்துடன் உரிய வெதுப்பக உரிமையாளருக்கு சுகாதாரச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்வதற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. *(ம-4,7,299)*

## வடக்குமாகாண புத்தாண்டுக் கொண்டாட்டம்

*(சுன்னாகம்)*

வடக்கு மாகாண சித்திரைப்புத்தாண்டுக் கொண்டாட்டமானது இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் அதே வேளை சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலர் இளங்கோவன் அவர்களும் கௌரவ விருந்தினராகக் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் பத்மநாதன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். *(ம-4,7)*

## கடலில் தவறி விழுந்த மீனவர் சடலமாக மீட்பு

*(மட்டக்களப்பு)*

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை நடுத்துறைக் கடலில் தவறி விழுந்து காணாமல் போன மீனவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கடலுக்கு மீன்படிக்கச் சென்ற மேற்படி மீனவர் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் மீன்பிடித்துவிட்டு படகின் ஒரு பகுதியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது தவறி விழுந்து காணாமல் போயிருந்தார்.

இவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் காணாமல்போனவரின் சடலம் மீனவர்களினால் மீட்கப்பட்டுள்ளது.

பாலமுனையைச் சேர்ந்த குடும்பஸ்தரான 59 வயதுடைய என்பவரே இவ்வாறு காணாமல்போன நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். *(ம-4,7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு வருஷ' புத்தாண்டு பலன்கள்



கிரகநிலை - இராசியில் குரு - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சந்திரன் - தொழில் ஸ்தானத்தில் சனி - லாப ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன் (வ), புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன் என வலம் வருகிறார்கள்.

கிரகமாற்றங்கள்: 26-04-2025 அன்று ராகு பகவான் களில் புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்வீர்கள். நண்பர்கள், கூட்டாளிகள் உங்கள் வேலைகளில் பங்கு கொள்வர். உங்களுக்கு கீழ் வேலை செய்பவர்கள் தேவையான உதவிகளைச் செய்வர்.

முக்கிய விடயங்களில் நன்றாக சிந்தித்தபிறகே சரியான முடிவை எடுப்பீர்கள். புதிய இரகசியங்களை அறிவீர்கள். குடும்பத்தில் ஓரளவு நிம்மதியான சூழ்நிலை தொடரும் என்றாலும் அதை உங்களின் முன்கோப பேச்சுகளால் கெடுத்துக் கொள்ளும் சூழ்நிலையும் உருவாகும்.

அரசு வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளவும். குழந்தைகள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பர். குறிக்கோளை நோக்கி படிப்படியாக முன்னேறு

உத்தியோகஸ்தர்கள்: சக ஊழியர்களிடம் ஒற்றுமையாகப் பழகவும். மேலதிகாரிகளால் சிறு உபத்திரவங்கள் இருப்பினும் அதனால் பெரிய பாதிப்பு ஏதும் ஏற்படாது.

வேலைப்பளு கூடினாலும் தேவைக்கேற்ப சக ஊழியர்கள் உதவுவர். அலுவலக வேலைகளில் வெற்றி பெறுவீர்கள். கடமைகளில் கண்ணுங்கருத்துமாக இருப்பீர்கள். பயணங்களால் எதிர்பார்த்த இலாபங்களைப் பெறுவர். ஊதிய உயர்வும் கிடைக்கும்.

வியாபாரிகள்: வாடிக்கை




யைக் காண்பார்கள். பண்ப் புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்கால தேவைகேற்ற சேமிப்புத் திட்டங்களில் சேர்வீர்கள். வேலையில் புது உற்சாகமும் சுறுசுறுப்பும் காணப்படும். மற்றவர்களின் ஆசைவார்த்தைகளில் மயங்க வேண்டாம்.

மாணவர்கள்: முயற்சிக் கேற்றவாறு மதிப்பெண்களைப் பெறுவர். பெற்றோர்களின் ஆதரவும் நண்பர்களின் உதவியும் கிடைக்கும். ஆன்மிகத்திலும் விளையாட்டிலும் நேர்த்தியாக ஈடுபடுவீர்கள். படிப்பிற்காக போதிய பயிற்சிகளைத் தவறாமல் செய்வீர்கள்.

கார்த்திகை 2,3,4ஆம் பாதங்கள்: இந்த ஆண்டு உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்த குறையும் இருக்காது. உடன்

## தெளிவான பேச்சும் நிறைந்த செயல்திறனும் கொண்ட ரிஷப இராசி நேயர்களே!

லாப ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம். 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார்.

06-03-2026 அன்று சனி பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11-05-2025 அன்று குரு பகவான் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-10-2025 அன்று குரு பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம. 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி.

பலன்கள்: தெளிவான பேச்சும் நிறைந்த செயல்திறனும் கொண்ட ரிஷப இராசி நேயர்களே! நீங்கள் சார்ந்துள்ள துறைவீர்கள்.

பூர்வீகச் சொத்துக்களைப் பாதுகாக்க சட்டப்படி நடவடிக்கைகளை எடுப்பீர்கள். எதிர்பாராத பல நன்மைகள் எதிர்பாராத சூழ்நிலைகளில் கிடைக்கும். உங்கள் நிர்வாகத் திறமை கூடும்.

முக்கியமான காரியங்கள் நிறைவேறும். உங்கள் ஆத்ம சக்தியால் மனதைக் கட்டுப்படுத்தும் மறைமுகக் கலைகளில் தேர்ச்சிப் பெறுவீர்கள். நஷ்டம் வரும் என்று நினைக்கும் விடயங்களில் ஈடுபட மாட்டீர்கள். நண்பர்களின் பொறாமைகளுக்கும் அலட்சியங்களுக்கும் ஆளாக வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் எந்த இரகசியங்களையும் கூற வேண்டாம்.

பொருளாதார நிலை உயரும். வெளிநாட்டுத் தொடர்புடன் செய்யும் வர்த்தகம் இலாபம் தரும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிரிகளின் பலம் குறையும். பயணங்களின் மூலம் முக்கியமான எண்ணங்கள் ஈடேறும். செயல்களில் அலட்சியங்கள் இருந்தாலும் திட்டமிட்டு பணியாற்றி வெற்றி பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் காலகட்டமாக இது என்றால் மிகையில்லை.

யாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வர். உங்களின் செயல்கள் சராசரியான வெற்றியைக் கொடுக்கும். வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக கடையை அழகுபடுத்துவீர்கள். சீரான வருமானத்தால் பழைய கடன்களை அடைத்துவிடுவீர்கள். கூட்டாளிகளிடம் எச்சரிக்கை தேவை.

அரசியல்வாதிகள்: எதிரிகளுக்குத் தக்க பதிலடி கொடுப்பர். வழக்குகளிலும் சாதகமான தீர்ப்பு வரும். கட்சியில் புதிய பணிகளைச் சாதுர்யமாகச் செய்து முடிப்பீர்கள். செல்வாக்கு உயரும். சம்பந்தமில்லாத விடயங்களில் தலையிட வேண்டாம். தொண்டர்களையும் அனுசரித்துச் செல்லவும்.

கலைத்துறையினர்: புதிய ஒப்பந்தங்கள் தாமாகவே கிடைக்கும். ஆனாலும் ஒப்பந்தங் களை முடித்து நற்பெயரை எடுப்பர். ரசிகர்களை உற்சாகப் படுத்தி அவர்களின் பேராதரவைப் பெறுவர். செயல்களைச் சீரிய முறையில் திட்டமிட்டுச் செய்யவும். செயல்களில் முழுத்திறமையையும் பயன்படுத்துங்கள்.

பெண்கள்: குடும்பத்தினர் மதிப்புடனும் கௌரவத்துடனும் நடத்துவர். இல்லத்தில் மகிழ்ச்சி

பணிபுரிவோரிடம் அனுசரனையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தை சந்திக்கலாம்.

ரோகிணி: இந்த ஆண்டு சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். ஆனாலும் உழைப்புக்கேற்ற இலாபம் கிடைக்கும். தொழில்நிமித்தமாக நீண்ட தூரம் பயணம் போக வேண்டி வரும்.

மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாதங்கள்: இந்த ஆண்டு எதிரிகள் வகையில் அசட்டையாக இருத்தல் கூடாது. புதிய முதலீடுகளின் போது ஆலோசனைகள் அவசியமாகிறது. பணவிடயத்தில் தொடர்ந்து அக்கறை தேவை.

பரிகாரம்: வெள்ளிக் கிழமைதோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று வரவும். "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரத்தை தினமும் 11 முறை சொல்லுங்கள். உங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறும். கிழக்கு, வடக்கு ஆகிய திசைகள் அதிஷ்டமாக இருக்கும். சந்திரன் - குரு - சுக்கிரன் பயன்தருவதாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிகண்டி...

மீட்கப்பட்டவராவார்.

உயிரிழப்புத் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4,60)

## விபரீத முடிவெடு...

இதில் அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அம்பலவாணர் தர்மராசா (வயது-50) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 8ஆம் திகதி மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக குறித்த நபர் நஞ்சருந்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் மல்லாவி மற்றும் கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,4)

## இரு பெண்கள்...

வவுனியா பூந்தோட்டம் பாடசாலை திசையில் இருந்து வவுனியா நகரம் நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் எதிர்த்திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இரு பெண்கள் மற்றும் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-7,4,250)

## வடமராட்சியில்...

டன் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சிக் கிழக்கு கடற்பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகளை முடக்கும் நோக்கில் வெற்றிலைக் கேணி கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புக்களை கரையோரம் மற்றும் கடற்பரப்புகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் முகமாக நேற்றுக் காலை கட்டைக்காட்டு கடற்பரப்பில் ஒளிபாய்ச்சி மீன்பிடித்த அதே பகுதியைச் சேர்ந்த 10 பேர் நான்கு படகுகளுடனும் உடைமைகளுடனும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மேலும் ஒரு படகு மூன்று பேருடன் சட்டவிரோதமான முறையில் இரவு நேரத்தில் அட்டைகளைப் பிடித்துக் கொண்டிருந்தபோது கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம-7,4)

## ஜனாதிபதி...

வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மக்கள் சந்திப்பு ஒன்று நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,4)

## அரச உத்தியோக...

கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த குறித்த இளைஞன் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றுகின்றார்.

கடந்த வாரம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காரணமின்றி தன்னைத் தாக்கி கைவிலங்கிட்டதாக குறித்த இளைஞன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் எதிர்வரும் 21ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ஆகியோரை விசாரணைக்கு வருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். (ம-7,4)

## அனுமதி...

மாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 9ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் குறித்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும் தடுப்புக் காவலில் உள்ள சந்தேக நபருடன் தொலைபேசியில் உரையாடுவது சட்டவிரோதமானது எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

சிவநேசதுரை சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக உதய கம்மன்பில செயற்பட்டதால் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## வேட்புமனு...

பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்கு வழங்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கட்சிகளின் செயலாளர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளது.

சமாதான நீதிபதிகளால் பிறப்புச் சான்றிதழ்களை சான்றளிப்பது மற்றும் அரசியலமைப்பின் 7வது அட்டவணையின் கீழ் எடுக்கப்பட்ட சத்தியப்பிரமாணம் தொடர்பான சிக்கல்கள் காரணமாக பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் பல சுயேட்சைக் குழுக்களிடமிருந்து பல வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்தன.

அதன்படி மனுக்களை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், சம்பந்தப்பட்ட பிரிவுகளில் தேர்தல் நடத்தும் அதிகாரிகளை மீண்டும் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ள உத்தரவிட்டது.

இதற்கமைய அந்த வேட்புமனுக்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்த அரசியல் கட்சிகளுக்கு, சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு மனுக்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளின் நகல்களை வழங்கு மாறு சம்பந்தப்பட்ட கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஆணைக்குழு கோரியுள்ளது. (ம-4,7)

# கம்பஹாவில் துப்பாக்கிச் சூடு

(கம்பஹா)

கம்பஹா நகரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த 2 நபர்கள் சிறிய லொறி ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நேற்றிரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில் சிறிய லொறியில் பயணித்த 2 பேர் வாகனத்திலிருந்து இறங்கி அருகிலுள்ள கடைக்கு ஓடியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் அவர்களுக்கு காயம் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் லொறிக்கு மட்டுமே சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ரணில் விக்கிரம...

பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் பட்டலந்த விசாரணை அறிக்கை பூரணமான அறிக்கையல்ல. அது 280 பக்கங்களைக் கொண்ட முதற்கட்ட விசாரணை அறிக்கையாகும்.

சாட்சி அறிக்கைகள் உடன் மொத்தமாக அந்த விசாரணை அறிக்கை 700க்கும் அதிக பக்கங்களைக் கொண்டதாகும். அந்த முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறே நாங்கள் தெரிவித்திருந்தோம்.

அதேபோன்று இந்த அறிக்கையை மூன்று மொழிகளிலும் மொழிபெயர்ப்பதாகத் தெரிவித்திருந்தார்கள். என்றாலும் இந்த விசாரணை அறிக்கை 1998ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த பின்னர் இந்த அறிக்கையை மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டது. அது தொடர்பான பிரதிகளை அரச வெளியீட்டு நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இந்த அறிக்கை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. ஆனால் அவ்வாறு சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டியது இல்லை என்றார். (ம-7,4)

## இளம் யுவதி...

கிழக்கைச் சேர்ந்த யோகேஸ்வரன் சுதர்சினி (வயது-29) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த மாதம் 23ஆம் திகதி விவசாயத்துக்குப் பயன்படுத்தக்கூடிய கிருமிநாசினியை அருந்தியுள்ளார்.

உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக 24 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்.திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4)

## தபால் மூலமான...

குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்காக எதிர்வரும் மே 06ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவதைத் தடுத்து பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவினால் தபால்மூல வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போது குறித்த வழக்கின் தீர்ப்பை ஆய்வு செய்து அரச அச்சகத்திற்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

227 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 22, 23, 24 ஆகிய தினங்களில் நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் ஏப்ரல் 28 மற்றும் 29 ஆகிய தினங்களில் வாக்களிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதியின் நினைவேந்தலை அரசியலாக்க முயற்சிக்கப்படுகின்றது

## மகள் பொலிஸில் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தலை வைத்து வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்று அதனை ஒரு அரசியலாக்கி நினைவேந்தலைச் செய்யவுள்ளதாகவும் அதனை தடைசெய்யுமாறும் கோரி 3 பேருக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் நேற்று செவ்வாய்க்கிழமை (15) முறைப்பாடு செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

தியாக தீபம் அன்னை பூபதியின் 37 ஆவது நினைவேந்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி அவரது சமாதியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் குறித்த நினைவேந்தலை முன்னிட்டு மனித நேய செயற்பாட்டாளர்களான 3 பேர் நோர்வே நாட்டிலிருந்து தனது தாயாரின் பெயரைப் பயன்படுத்தி பணத்தைப் பெற்று விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அன்னையின் திருவுருவப் படத்தை வாகனத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

அமைதியாகச் செய்ய வேண்டிய இந்த நினைவேந்தலை இந்த மூவரும் அரசியலாக்கி இலாபமடையவுள்ளனர்.

இவ்வாறு செய்வதை நான் விரும்பவில்லை. ஆகவே இந்த 3 பேரின் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தி இவர்களைத் தடைசெய்து அமைதியாக நினைவேந்தலைச் செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருமாறு குறிப்பிட்டு, அவர்களுக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,7)

---

அஞ்சல் திணைக்களத்திடம்

# வாக்காளர் அட்டைகள் இன்று ஒப்படைக்கப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தநிலையில் குறித்த தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் ஏற்கனவே அஞ்சல் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் சுமார் 250 உள்ளூராட்சி நிறுவனங்களில் திட்டமிட்டபடி மே மாதம் ஆறாம் திகதி தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-4,7)

---


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2716)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2715)
076 825 7716 (ஆகாஸ்)

நம்பினால் நம்புங்கள்
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும். (3849)
காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
077 844 9861, 076 776 3291

வேலையாட்கள் தேவை
◆ வெதுப்பக உற்பத்திப் பொருட்கள் செய்யக்கூடிய ஆட்கள் தேவை.
◆ விற்பனையாளர்கள் தேவை. (இருபாலாரும்)
சண்டிலிப்பாய் பிரதேச சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (3953)
தொடர்புகளுக்கு:
077 548 8044


6 ஆம் ஆண்டு நினைவில்



தோற்றம் 1945 . 03 . 28
மறைவு 2019 . 04 . 22

அமரர் திரு. செல்லத்துரை தர்மரத்தினம்
(பெரியண்ணை)
(உரிமையாளர் - STR Multy Center, STR Travels - அராலி)
திதி: 16.04.2025 சங்கடஹர சதுர்த்தி
துன்னாலை மத்தி, கோவிற்கடவை, கரவெட்டி.
என்றும் உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர் (3952)



A/L இரசாயனவியல் பரீட்சை 2027Batch
திரு. Lt.T.நாகரட்ணம் ஆசிரியர் ஞாபகார்த்த மாதாந்த தொடர் பரீட்சை
இரசாயன அலை – 1
ஆரம்பம் : 25.04.2025
ஆசிரியர் : திரு.S.சுரேஸ்குமார் BSc(Hons) PGDE(merti)
◆ விரும்பிய மாணவர்கள் யாரும் தோற்ற முடியும்.
◆ தவணைப் பரீட்சையைக் கருத்திற் கொண்டு பாடத் திட்டங்களுடன் மேற்கொள்ளப்படும்.
Smart Science Academy
154A, Navalar Road, Jaffna.
நிரு கல்வி நிலையம், கோண்டாவில். (3948)
T.P : 0775 559 028, 0777 872 903

Pearson International College



◆ இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
◆ கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
◆ எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
◆ இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching (1009)
074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் நடன பாட ஆசிரியர்
திருமதி அ.ஜெயமங்கள ஜெறாட்
அவர்களின் அன்புத் தந்தையார்
(C-2713)

## மடுத்தீன் லாசரஸ்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென் மேரிஸ் வித்தியாலயம் (O.L.R)


காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 6 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.
◆ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
◆ ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=), இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=), பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
◆ நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
◆ தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
◆ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
◆ கரவெட்டிப் பிரதேச சபை 1Km தூரம்
◆ தரகர் தேவையில்லை.
(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)
தொடர்புகளுக்கு:
076 860 2770, 076 987 8617
076 935 3971
(3955)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.